# உணவு கண்காட்சியை பார்வையிட்டார்



துபாயில் நடந்து வரும் வளைகுடா உணவு கண்காட்சியை துபாய் ஆட்சியாளரும், அமீரக பிரதமரும், துணை அதிபருமான மேதகு ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் பார்வையிட்ட போது எடுத்த படம். அருகில் துணை ஆட்சியாளர் மேதகு ஷேக் மக்தூம் பின் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

### பிரதமர் நரேந்திர மோடி நடவடிக்கையால்

# இந்தியாவில் முதலீடு செய்ய வெளிநாட்டு வர்த்தகர்கள் ஆர்வம்

## இந்திய உணவு பதப்படுத்தும் துறை மந்திரி கர்சிம்ரத் கவுர் பாதல் பேச்சு

துபாய், பிப்.23-

பிரதமர் நரேந்திர மோடியின் நடவடிக்கையால் இந்தியாவில் முதலீடு செய்ய வர்த்தகர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள் என்று இந்திய உணவு பதப்படுத்தும் துறை மந்திரி கர்சிம்ரத் கவுர் பாதல் பேசினார்.

### வர்த்தக, தொழில் வல்லுனர் குழு கூட்டம்

துபாய் இந்திய வர்த்தக மற்றும் தொழில் வல்லுனர் குழு கூட்டம் ஓபராய் ஓட்டலில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு துபாய் இந்திய வர்த்தக மற்றும் வல்லுனர்குழுவின் தலைவர் குல்வந்த் சிங் தலைமை தாங்கி பேசினார்.

இந்திய துணைத் தூதர் அனுராக் பூசன் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக இந்திய உணவு பதப்ப...




துபாய் இந்திய வர்த்தக மற்றும் தொழில் வல்லுனர் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட இந்திய உணவு பதப்படுத்தும் துறையின் மந்திரி கர்சிம்ரத் கவுர் பாதலுக்கு, குழுவின் தலைவர் குல்வந்த் சிங் நினைவுப் பரிசு வழங்கி கவுரவித்த போது எடுத்த படம். அருகில் குழுவின் நிர்வாகிகள் உள்ளனர்.

கர்கள் அதிக அளவில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வரு...

கின்றனர். இதற்காக உணவு ...

குல்வந்த் சிங் பேசும் போது, "அமீரக வர்த்தகர்கள் இந்தி...

### புருனே நாட்டின் தேசிய தினம்

## அமீரக தலைவர்கள் வாழ்த்து

அபுதாபி, பிப்.23-

புருனே நாட்டின் தேசிய தினத்தையொட்டி அந்த நாட்டின் சுல்தான் ஹசனல் பொல்கியாவுக்கு, அமீரக அதிபர் மேதகு ஷேக் கலீபா பின் ஜாயித் அல் நஹ்யான் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இதே போன்று, துபாய் ஆட்சியாளரும் அமீரக பிரதமரும், துணை அதிபருமான மேதகு ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் மற்றும் அபுதாபி பட்டத்து இளவரசரும், அமீரக ஆயுதப்படைகளின் துணை சுப்ரீம் கமாண்டரும், அபுதாபி நிர்வாக கவுன்சில் தலைவருமான மேதகு ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் ஆகியோரும் தங்களது வாழ்த்து செய்தியை அனுப்பியுள்ளனர்.

### சாலையை கடக்க முயன்ற

## 3 வயது சிறுவன் கார் மோதி சாவு

சார்ஜா, பிப்.23-

சார்ஜாவில் உள்ள ஜமால் அப்துல் நாசர் சாலை மிகவும் பரபரப்பான பகுதியாகும். இந்த பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். அவர்களின் 3 வயது மகன் அருகில் உள்ள கடையில் மிட்டாய் வாங்கி விட்டு வீட்டுக்கு வரும்போது சாலையை கடக்க முயன்றான்.

அப்போது அந்த வழியாக வேகமாக சென்ற கார் அந்த சிறுவன் மீது பலமாக மோதியது. இதனால் சிறுவன் தூக்கி வீசப்பட்டு ரத்த வெள்ளத்தில் உயிருக்குப்போராடினான். தகவலின் பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த ஆம்புலன்ஸ் மூலம் சிறுவன், அங்குள்ள அல் காசிமி ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டான். அங்கு சிகிச்சை பலனின்றி சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தான். இது குறித்து போலீசார் வழக்குப் பதிவு செய்து எகிப்து நாட்டை சேர்ந்த கார் டிரைவரை கைது செய்தனர்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

★ குளோபல் வில்லேஜ் கண்காட்சி; இடம்-குளோபல் வில்லேஜ், ஷேக் முகம்மது பின் ஜாயித் சாலை, துபாய், நேரம்-மாலை 4 மணி.

★ சிறப்பான வாழ்க்கைக்கான ...



சார்ஜாவில் பிளாஸ்டிக் உள்ளிட்ட 3 வர்த்தக கண்காட்சிகளை சார்ஜா துணை ஆட்சியாளர் தொடங்கி வைத்த போது எடுத்த படம். அருகில் இந்திய துணைத் தூதர் அனுராக் பூசன் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

# சார்ஜாவில், பிளாஸ்டிக் உள்ளிட்ட 3 வர்த்தக கண்காட்சிகள்

## துணை ஆட்சியாளர் தொடங்கி வைத்தார்

சார்ஜா, பிப்.23-

சார்ஜாவில் பிளாஸ்டிக் உள்ளிட்ட 3 முக்கிய வர்த்தக கண்காட்சிகள் நேற்று தொடங்கின. இந்த கண்காட்சிகளை துணை ஆட்சியாளர் ஷேக் அப்துல்லா பின் சலீம் பின் சுல்தான் அல் காஸிமி தொடங்கி வைத்தார்.

### வர்த்தக கண்காட்சிகள்

சார்ஜா எக்ஸ்போ சென்டரில் பிளாஸ்டிக், பிரிண்டிங் மற்றும் மோல்டு மேக்கிங் ஆகிய 3 முக்கிய வர்த்தக கண்காட்சிகள் நேற்று தொடங்கின. கண்காட்சியை சார்ஜா துணை ஆட்சியாளர் ஷேக் அப்துல்லா பின் சலீம் பின் சுல்தான் அல் காஸிமி தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து கண்காட்சியில் அமைந்துள்ள பல்வேறு நிறுவனங்களையும் பார்வையிட்டார். அந்த நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம் உள்ளிட்ட விவரங்களை கேட்டறிந்தார். கண்காட்சி தொடக்க நிகழ்ச்சியில் இந்திய துணைத் தூதர் அனுராக் பூசன், மத்திய அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### 250-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள்

இந்த கண்காட்சி குறித்து சார்ஜா எக்ஸ்போ சென்டரின் தலைமை செயல் அலுவ...

கண்காட்சியில் உலகின் 250-க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. உலகின் வேறு எந்த கண்காட்சியிலும் காண முடியாத அளவுக்கு உபகரணங்களை இங்கு காணலாம். அகில இந்திய பிளாஸ்டிக் தயாரிப்பாளர் சங்க உறுப்பினர்களாக உள்ள நிறுவனங்களும் இந்த கண்காட்சியில் பங்கேற்றுள்ளன. இந்த கண்காட்சி வியாழக்கிழமை (நாளை மறுநாள்) வரை நடைபெறும். காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இந்த கண்காட்சியை பார்வையிடலாம். பிளாஸ்டிக், பிரிண்டிங் உள்ளிட்ட நவீன தொழில் நுட்பங்கள் குறித்த விவரங்களை இந்த கண்காட்சி மூலம் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

### அமீரகம் உள்ளிட்ட வளைகுடா நாடுகள்

# 'வாட்', 'வருமானம்' வரிகளை அமல்படுத்த வேண்டும்

## சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குனர் வேண்டுகோள்

அபுதாபி, பிப்.23-

அமீரகம் உள்ளிட்ட வளைகுடா நாடுகள் வாட், வருமானம், சொத்து உள்ளிட்ட வரிகளை அமல்படுத்த வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குனர் கிறிஸ்டின் லகார்டே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

